வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.06.2024 புதன்கிழமை இதழ் : 185 பக்கங்கள் : 12

# பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளரை நிறுத்துவோம்!



## சீனாவிலிருந்து வந்த கையோடு தெரிவித்தார் மகிந்த ராஜபக்ஷ!

கொழும்பு, ஜூலை 03

**"பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்திப் பார்ப்போம்", - இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ.**

4 நாட்கள் பயணமாக சீனா சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பினார். அப்போது, அவர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. வேட்பாளர் யாரென்று கட்சியே முடிவெடுக்கும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(ஐ)

## கஜேந்திரகுமாருக்கு 3 மாத விடுமுறை!

கொழும்பு, ஜூலை 03

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பாராளுமன்றம் 3 மாத விடுமுறை அளித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன

11

## பூநகரி காற்றாலை மின் திட்டத்தில் நிதி மோசடி

### எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, ஜூலை 03

பூநகரி காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்தில் பெரும் நிதி மோசடி நடந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று

11

## அதிகார பகிர்வை நிறைவேற்றுவதே சம்பந்தனுக்கான உயர்ந்த அஞ்சலி!

### பாராளுமன்ற உரையில் ஜனாதிபதி இரங்கல்

கொழும்பு, ஜூலை 03

அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். அதற்காக போதுமான பங்கை செய்துள்ளார். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த அஞ்சலியாக இருக்கும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் மறைந்த இரா. சம்பந்தனுக்கு இரங்கல் உரையாற்றினார். இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நான் இந்த உரையாற்றும் போது அன்று என்னுடன் பாராளுமன்றத்துக்கு

11

## அரசியல் அதிகாரங்களுக்காக நான் முடிவுகளை எடுப்பதில்லை



### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

- கடனை திருப்பி செலுத்த 2028 வரை சலுகை
- வழிமாறின் 30 வருடத்துக்கு நாட்டை மீட்கமுடியாது
- நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் இணையுங்கள்

கொழும்பு, ஜூலை 03

கடந்த இரண்டு வருடங்களாக நான் அரசியலில் ஈடுபடவில்லை. நான் எப்போதும் நாட்டுக்காகவே தீர்மானங்களை எடுத்து வருகிறேன். அரசியல் அதிகாரத்துக்காகவோ அல்லது பிரபல்யத்துக்காகவோ முடிவுகளை எடுப்பதில்லை -

11

## தேசிய அரசாங்கம் அமைக்க ஆதரவளிக்கப் போவதில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, ஜூலை 03

தேசிய அரசாங்கம் அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயன்றால் அதற்கு ஆதரவளிப்பதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. புத்திக பத்திரண எம்.பி. முன்மொழிந்த யோசனைக்கே இந்த அனுமதி

11

## வடக்கில் டெங்கு நோய் பரவும் அபாயம் உயர்வு

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

கொழும்பு, ஜூலை 03

வடக்கு, மேல் மாகாணங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 28 ஆயிரத்து 239 டெங்கு நோயாளர்கள்

11

## கடன் நிலைபேறடைவதிலிருந்த நிச்சயமற்ற நிலை முடிந்துவிட்டது

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஜூலை 03

கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதில் நாட்டில் இருந்த அனைத்து நிச்சயமற்ற தன்மைகளும் தற்போது முடிவுக்கு வந்துவிட்டன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் இருக்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள சில தரப்பினர் தமது

11

## நீதிமன்றில் வெடிகுண்டு; வதந்தி பரப்பியவர் கைது

கண்டி, ஜூலை 03

கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக நேற்று வதந்தி பரவியதால் பெரும் பதற்றம் பரவியது. இதையடுத்து, நேற்றைய தினம் நடைபெறவிருந்த வழக்குகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டன. எனினும், பொய் தகவலை பரப்பினார் என்று கூறப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய

11

## ரணில் உள்ளிட்ட தலைவர்கள் சம்பந்தனின் உடலுக்கு அஞ்சலி!

கொழும்பு, ஜூலை 03

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமான இரா. சம்பந்தனின் பூதவுடல் நேற்று கொழும்பு - பொரளையிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவுக்கு இதுவரை அஞ்சலி செலுத்தாதவர்களே இல்லை என்னுமளவுகு எல்லோருமே அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அவரின் இழப்பு பற்றிய செய்திக் குறிப்பு ஒன்றை பார்க்க முடிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்றே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைப் பார்த்து விட்டு ஓர் ஊடக நண்பர் கேட்டார், தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறி தனித்துப் போட்டியிடுவதென்று கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் முடிவெடுத்தபோது அதற்கு அனுமதி கொடுத்தவர்தானே ஐயா, பிறகு எதற்கு அவரை அதன் தலைவராக சித்தரிக்கிறார்கள்? என்று கேட்டார்.

அவையெல்லாம் குறிப்பிடப்பட வேண்டிய அல்லது பேசப்படவேண்டிய சங்கதிகள் அல்ல இப்போது. ஆனால், அவரின் மறைவுக்கு அவரது சொந்த மண்ணில் இரண்டு அணிகளாக அஞ்சலி செலுத்தப்படுவதை குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.

கட்சியின் அலுவலகத்தில் திருகோணமலை மாவட்ட வருங்கால எம். பியான குகதாசன், ஐயாவின் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தும் அதே வேளை, அவரின் இல்லத்தில் இன்னுமோர் அணியினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஐயாவின் மறைவையடுத்து காலியாகியிருக்கும் திருகோணமலை மாவட்ட எம். பி. பதவிக்கு கடந்த தேர்தலில் விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்து இருக்கும் குகதாசன் நியமிக்கப்படவிருக்கிறார். ஐயாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய நபராக திருகோணமலையில் வலம் வந்தவர் இந்த குகதாசன். ஆனால், கடைசிக்காலத்தில் இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு இரகசியமானது அல்ல. தனக்கு வேண்டியவர்களை கட்சி பதவிகளுக்கு நியமிப்பதில் அவர் தவறிழைத்தாரென ஐயா முறையிட்டதும் இதனையடுத்து அவர் அதுபற்றி பொதுவெளியில் பேசியதும் அனைவருக்கும் தெரிந்தவைதான். ஆனாலும் அவரின் இழப்பு செய்தி அறிந்ததும் அனைவருமே அரசியல் வேறுபாடுகளை மறந்து அஞ்சலி செலுத்திவரும் இவ்வேளையில் இவை அவசியமானவையா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இதேவேளை, சம்பந்தன் ஐயாவின் இறுதிக் கிரியைகளை அரச மரியாதையுடன் செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்தாரெனவும் ஆனால், அது கட்சிக்குள் சிலரின் முணுமுணுப்புக்கு உள்ளாகியதாகவும் சமூக வலைத்தளங்களில் சில ஊடகவியலாளர்கள் பேசிவருகின்றனர்.

அரசுக்கு எதிராக தமது உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஓர் இனத்தின் தலைவருக்கு அந்த அரசாங்கத்தின் மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் நடத்துவதா என்று கட்சிக்காரர்கள் சிலர் முணுமுணுத்த செய்தி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, அவர் கேட்ட கேள்வி பற்றியும் ஓர் ஊடக நண்பர் எழுதியிருக்கிறார். "அரசாங்கம் கொடுத்த பங்களாவில் அவர் வாழ்ந்துகொண்டிருந்தபோது இவர்கள் எங்கே இருந்தார்களாம்"- நியாயமான கேள்விதான்.

ஆனால், அரசின் மரியாதையை ஏற்றுக்கொள்ள அவரது குடும்பத்தினர் விருப்பம் தெரிவித்தனரெனவும் கிழக்கு மாகாண ஆளுநர் அதற்கான ஏற்பாடுகளை தொடங்கிவிட்டார் என்றும் மற்றுமொரு செய்தி தெரிவித்தது. ஒருவரின் மரணத்தின் போது அவர் பற்றி விமர்சிப்பது நமது பண்பல்ல என்று நேற்று இந்தப் பத்தியில் எழுதிவிட்டு, இன்று இப்படி எழுதலாமா என்று கேட்கலாம். இது அவர் பற்றிய விமர்சனமல்ல. அவரை வைத்து அரசியல் செய்பவர்கள் பற்றியது இது.

இனி இன்று எழுத வந்த விடயத்துக்கு வருவோம்.

ஆங்கிலத் திரைப்படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால், அந்த வசனத்தை எந்தக் கூச்சமோ தயக்கமோ இல்லாமல் அடிக்கடி சொல்வார்கள். அதனையே தமிழில் சொல்வதென்றால் அது காதுகொடுத்து கேட்கமுடியாத தூஷண வார்த்தை. ஆனால், ஆங்கில படங்கள் பார்ப்பவர்களுக்குத் தெரியும் அந்த வார்த்தையை எடுத்ததெற்கெல்லாம் பயன்படுத்துவார்கள்.

அதாவது, சில வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொல்கின்றபோது நமக்கு உறைப்பதில்லையோ என்னவோ.

அண்மையில், அமெரிக்காவின் சுதந்திர தினத்தையொட்டிய விருந்துபசாரம் ஒன்று கொழும்பில் நட்சத்திர விடுதியில் நடந்தது. இலங்கையிலுள்ள வி. வி. ஐ. பிக்கள் அனைவருமே அங்கு பிரசன்னமாகியிருந்தனர். நமது தமிழ் எம்.பிக்களும்தான்.

செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சுமந்திரன் என்று அனைவருமே அங்கே பிரசன்னமாகியிருந்தனர்.

விருந்துபசாரம் நடந்துகொண்டிருந்தபோதே அங்கிருந்து வெளியேற விரும்பிய சில எம். பிக்களுடன், நமது அரசியல் ஆய்வாளர் ஒருவரும் அவர்களோடு இணைந்து வெளியேறுவதற்கு முன்னதாக அமெரிக்க தூதுவரிடம் விடை பெறுவதற்காக சென்றிருக்கின்றனர்.

இவர்களை கண்டதும் அவர், "ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் விடயம் எப்படி இருக்கின்றது?" என்று கேட்டிருக்கிறார். உடனே அந்த அரசியல் ஆய்வாளர், "எல்லாம் சரியாகப் போய்க்கொண்டிருக்கின்றது. ஆனாலும் இன்னமும் இறுதி முடிவு எட்டப்படவில்லை" என்று சொல்ல, பின்னால் வந்துகொண்டிருந்த சுமந்திரன், பாய்ந்து, "அது எல்லாம் சரிவரப்போவதில்லை. இவர்கள் சிலி பீப்பிள்" என்றிருக்கிறார்.

நான் மேலே சொன்னதுபோல ஆங்கிலப் படத்தில் வருகின்ற தூஷண வார்த்தையை நாம் கண்டும் காணாமல் இருப்பதுபோல, அவர் "சிலி பீப்பிள்" என்று சொன்னதை அங்கே இருந்த மற்றைய எம். பிக்கள்- அதாவது பொது வேட்பாளருக்கு ஆதரவான எம். பிக்கள் அமைதியாக கேட்டுக்கொண்ருந்தனர்.

"முட்டாள் பயல்கள்" என்று தமிழில் சொல்லியிருந்தால் கோபம் வந்திருக்குமோ என்னவோ?

ஆனாலும், இந்த விடயத்தைப் பற்றி பேசத் தொடங்கியதும் அவருக்கு வந்த கோபமும் முந்திக் கொண்டு பதில் சொன்னதும் நிச்சயம் அமெரிக்க தூதுவருக்கு சினத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.!

- ஊர்க்குருவி

# தமிழ் அரசு தலைமை பணிமனையில் சம்பந்தனுக்கு நேற்று நினைவஞ்சலி!



யாழ்ப்பாணம், ஜூலை 03

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு நேற்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் தலைமை பணிமனையில் அந்தக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு சம்பந்தனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் மாவை சேனாதிராசா, கட்சியின் நிர்வாக செயலர் எக்ஸ். குலநாயகம், யாழ். மாநகர முன்னாள் மேயர் இ. ஆனல்ட் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர். (ஐ)

# இந்திய துணைத் தூதரகத்தின் சேவையை பெற இலகு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 03

வடக்கு மாகாணத்தில் வசிக்கும், தொழில் காரணமாக தங்கியிருக்கும் இந்திய பிரஜைகளுக்கான தூதரக விடயங்களுக்கான "ஓப்பின் ஹவுஸ்" கலந்துரையாடல் ஒவ்வொரு புதன்கிழமையும் முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் - யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் வசிக்கும், பணிபுரியும் இந்தியர்கள் கடவுச்சீட்டு மற்றும் தூதரக விவகாரங்கள் அல்லது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வைப் பெற இந்தக் கூட்டங்களில் பங்கேற்க முடியும் என்று இந்திய துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேபோன்று, இந்த மாவட்டங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் வீசா, ஓ. சி. ஐ. மற்றும் தூதரக சேவைகள் போன்ற பி. சி. சி. , சான்றொப்பம் போன்றவை தொடர்பான குறைகள் / வேண்டுகைகள் போன்றவற்றுக்காகவும் இந்தக் கலந்துரையாடலை அணுக முடியும்.

தேவையுடையோர் தமது பங்கேற்பை உறுதிப்படுத்த 21-222 0504, 21-222 0505 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் அல்லது cons.jaffna@mea.gov.in என்ற மின்னஞ்சல் மூலம் முற்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொருளாதார உருமாற்ற சட்டமூலத்தின் பல சரத்துகள் அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றின் முடிவை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை 03

பொருளாதார உரு மாற்ற சட்டமூலத்தின் பல சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபா நாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

அதன்படி, சட்டமூலம் பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் கூறினார்.

எனினும் அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மேலும் குறிப்பிட்டார். (அ)

# திசைக்காட்டிமீது கற்களையோ சேற்றையோ வீசி வீழ்த்தமுடியாது

கொழும்பு, ஜூலை 03

திசைக்காட்டி மீது கற்களையோ அல்லது சேற்றையோ வீசி வீழ்த்திவிட முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அவதூறுகளின் வெள்ளத்தை தடுத்து நிறுத்துவது சாத்தியமற்றது என்பது உறுதியாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், 21ஆம் நூற்றாண்டில் எமது நாடு ஒரு புதிய மறுமலர்ச்சிக்கான பாதையில் பயணிக்க வேண்டும். இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மாத்திரமன்றி, நாட்டின் புதிய பாய்ச்சலுக்காக அனைத்து சக்திகளும் ஒன்றிணைவதற்கான சந்தர்ப்பமாக இதனைக் கருதுமாறும் அவர் கோரியுள்ளார்.

மேலும், மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் வரை சலுகைகள் வழங்கப்படும் எனத் தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க மக்கள் காலூன்றி நிற்கும் வகையில் நாட்டில் உற்பத்திப் பொருளாதார நிலைமை உருவாக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (அ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 03

நெடுந்தீவு - பெருக்கடி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை சமுத்திர தீர்த்தமும் நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.07.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆனி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியா என்ன நினைக்கிறது...?

இலங்கையின் அரசியல் தீர்மானங்கள் எதுவானாலும் அதில் வெளித்தலையீடுகள் தவிர்க்க முடியாதவை. குறிப்பாக, இந்தியாவின் கரிசனைகள் பிரதானமானவை. இலங்கை, இந்தியாவின் உடனடி அயல்நாடு என்னும் வகையிலும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதாலும் இந்தியாவின் தலையீடுகள் தவிர்க்க முடியாதவை. இந்த யதார்த்தத்தைப் புறந்தள்ள வேண்டுமென்று எவர் வேண்டுமானாலும் விரும்பலாம். ஆனால், இந்த யதார்த்தத்தை எவராலும் புறந்தள்ளவே முடியாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் தொடர்பில் இந்தியாவின் அவதானம் என்ன - ஆர்வம் என்ன? இந்தக் கேள்விக்கான பதிலை அறிவதில் நிச்சயம் அனைவருமே ஆர்வத்துடன் இருப்பர். ஏற்கனவே, ஜே. வி. பியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார் - இவ்வாறானதொரு பின்புலத்தில், சஜித் பிரேமதாஸவும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறான அழைப்புகள் ஒரு செய்தியைத் தெளிவாக முன்வைக்கின்றன. அதாவது, ஜனாதிபதித் தேர்தல் எதிர்பார்த்தவாறு சாதாரணமானதொரு தேர்தலாக இருக்கப்போவதில்லை. மாறாக, நெருக்கடிகள்மிக்க தேர்தலாகவே இருக்கப் போகின்றது. இந்தியாவின் நலன்களுக்கு உகந்த வேட்பாளர் யார் என்றால் - பதில் நிச்சயமான ஒன்றல்ல. ஆனால், ஒப்பீட்டடிப்படையில் ரணில் மிகவும் பொருத்தமானவராக நோக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.

இதற்கு என்ன காரணம்? நிச்சயமாக இதற்கு ரணில் காரணமல்லர். மாறாக, ரணிலுடன் விடயங்கள் தொடர்பில் புதிதாக எதனையும் கூறவேண்டியதில்லை. ஏற்கனவே, திட்டமிட்டவாறு வடக்கு - கிழக்கில் மிகப்பெரிய முதலீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதில் சிக்கல்கள் இருக்கப்போவதில்லை. ஆனால், புதிய ஒருவரென்றால் - அவருக்கும் அவரின் குழுவினருக்கும் விடயங்கள் அனைத்தையும் புதிதாக விளங்கப்படுத்த வேண்டியிருக்கும் - இதனால் காலவிரயம் ஏற்படும்.

ஒருவேளை சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றாலும் இந்திய நலன்களுக்கு பெரியளவில் சிக்கல்கள் ஏற்படப்போவதில்லை. ஆனால், இங்கு இந்தியாவின் நலன்கள் மட்டும் விடயமல்ல. இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் மேலாதிக்க நகர்வுகளை எதிர்கொள்ளும் அமெரிக்க நகர்வுகளுக்கும் சிக்கல்கள் ஏற்படாதவாறான அரசியல் சூழலொன்றை ஏற்படுத்தக்கூடியவர் யார் என்பதும் கவனத்தில் கொள்ளப்படும். ஏனெனில், இலங்கைக்குள் ஏற்படும் அனைத்து அரசியல் நகர்வுகளினதும் பாதகமான விளைவுகளை முதலில் எதிர்கொள்ளும் நாடு இந்தியா மட்டும்தான் - அதன் பின்னர்தான் அமெரிக்கா இந்த விடயத்துக்குள் வரும். மகிந்த ராஜபக்ஷவின் சீனப் பயணமும் உற்றுநோக்கப்பட வேண்டியது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தியாவின் கரிசனைகள் தவிர்க்கவே முடியாதவை. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இந்திய அவதானம் துலக்கமான ஒன்றாக இல்லை. ஒன்றில் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க முடியாதென்னும் கணிப்பு இருக்கலாம் அல்லது சூழல் இன்னும் நன்றாகக் கனியும் வரையில் இந்தியா அமைதியாக இருக்கலாம்.

ஆனால், அநுரகுமாரவின் புதுடில்லி பயணமும் தற்போது சஜித் பிரேமதாஸவுக்கான அழைப்பும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சிக்கலான நிலைமையை தெளிவாகவே படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் எதிர்வரும் மாதங்களில் தமிழ் கட்சிகளின் அணுகுமுறைகள் கூர்ந்து உற்றுநோக்கப்படலாம். தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் உற்று நோக்கப்படலாம். ஆனால், தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு சமரசத்துக்கு அப்பால்பட்ட ஒன்றாகவே இருக்க முடியும்.





# நாதஸ்வர மேதை பஞ்சாபிகேசன் நூற்றாண்டு விழா கோலாகலம்!

*யாழ்ப்பாணம், ஜூலை 03*

நாதஸ்வர மேதை கலாநிதி எம். பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் சாவகச்சேரியில் பல நூற்றுக்கணக்கான இசை ஆர்வலர்களின் பங்கேற்புடன் கோலாகலமாக இடம்பெற்றது.

மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள பஞ்சாபிகேசன் வாழ்ந்த இல்லத்தில் அவரின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து இராக்கச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து பஞ்சாபிகேசனின் திருவுருவப்படம் மங்கல பொருட்களுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாதஸ்வர, தவில் கலைஞர்களின் இசை ஆராதனையுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையையும் ஆசிரியர் த. பரமானந்தம் தொடக்கவுரையையும் ஆற்றினர். பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், சட்டத்தரணி கே. சயந்தன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் கிருபாசக்தி கருணா ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

நாதஸ்வர கலை பற்றிய சிறப்புக்கட்டுரைகளை உள்ளடக்கிய எம்பஞ்சாபிகேசன் என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் வெளியீட்டுரையை செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் வழங்கினார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வரக் கலைஞர் பிச்சையப்பா ரஜீவன், தவில் கலைஞர் தெட்சணாமூர்த்தி உதயசங்கர் ஆகியோர் பஞ்சாபிகேசன் நினைவு தங்கப் பதக்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பஞ்சாபிகேசனுடன் நீண்டகாலம் பணியாற்றிய கலைஞர்கள் வரிசையில் தவில் வித்துவான் ச. முருகையா நாதஸ்வர வித்துவான் த. கோபாலசாமி ஆகியோர் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புகழ்பூத்த நாதஸ்வர, தவில் வித்துவான்கள் பங்கேற்ற இரண்டு கச்சேரிகள், பஞ்சாபிகேசனின் பேர்த்தி இசையாசிரியர் நிருத்திகா சுஜீவனின் பாட்டு இந்துக் கல்லூரி மாணவிகளின் நடனம் எனப் பல கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்துக் கல்லூரி அதிபர் வரவேற்புரையையும் கவிஞர் ச. மார்க்கண்டு கவி வாழ்த்தையும் வழங்கினர். நிகழ்வுகளை அதிபர் வை. விஜயகுமாரன் தொகுத்து வழங்கினார்.

(அ)

# பச்சிலைப்பள்ளி பண்பாட்டு விழா

*கிளிநொச்சி, ஜூலை 03*

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக- கலாசார பேரவை இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.


வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பளை மத்திய கல்லூரி ஆருக்ஷ் கிருத்திக் கலையரங்கத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் கலாசார பேரவை தலைவருமான இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் சு. முரளிதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ், கௌரவ விருந்தினர்களாக பளை மத்திய கல்லூரி அதிபர் குமாரசுவாமி ரவீந்திரா, தம்பகாமம் அண்ணாவியார் கலாபூசணம் கந்தையா ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்பர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 03 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆனி 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரயோதசி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். சக ஊழியர் களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரிகளிடம் நெருக்கம் உண்டாகும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கடகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி உங்களுக்கு உதவுவார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**துலாம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்களை நம்பி மூத்த அதிகாரிசில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**தனுசு**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். திருப்திகர மான சூழ்நிலை உருவாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். அமைதி நிலவும்.

**கும்பம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

# புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி. மு. க. சட்டத்துறை உண்ணாவிரதம்!

சென்னை, ஜூலை 03

மத்திய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் தி. மு. க. சட்டத்துறை சார்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தி. மு. க. சட்டத்துறை சார்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 10 மணியளவில் அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள் முன்பும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


மோடி தலைமையிலான மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள 3 குற்றவியல் சட்டங்களின் பாதகங்களையும் சட்டத் தரணிகள் மட்டுமின்றி பொது மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழகம் முழுவதும் கண்டனக் கருத்தரங்கம், அரங்க கூட்டங்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று தி. மு. க. சட்டத்துறை அறிவித்துள்ளது. (எ)

# "பெண்களுக்கான ஆட்சியை நடத்துகிறார் மு. க. ஸ்டாலின்"

விழுப்புரம், ஜூலை 03

பெண்களுக்கான ஆட்சியை தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நடத்தி வருகிறார் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கருங்காலிப்பட்டு, குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் அமைச்சர் பிரசாரம் மேற்கொண்டார். இதன்போது, 3 ஆண்டுகளில் பல சாதனை திட்டங்களை தி. மு. க. அரசு செயல்படுத்தியுள்ளது. குறிப்பாக பெண்களுக்கான ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவர் முதல்வர் ஸ்டாலின். ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் முதல்



கையெழுத்தாக மகளிர் இலவச பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் 1,000 ரூபாய் உதவித்தொகை போன்ற திட்டங்களை செயல்படுத்தினார் என்றும் அமைச்சர் கூறினார். (எ)

# மதுபான அடிமைகளின் மாநிலமாக தமிழகத்தை மாற்றிய ஆட்சியாளர்கள்

## அண்ணாமலை குற்றச்சாட்டு

கோவை, ஜூலை 03

தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்த தி. மு. கவும் அ. தி. மு. கவும் மதுபான அடிமைகளின் மாநிலமாக மாற்றியுள்ளனர் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

பா. ஜ. க. சார்பில் கோவை மக்களவை தொகுதி ஆய்வு கூட்டம் அவிநாசியில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்தது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் கூறியதை சிலர் நகைச்சுவையாகப் பார்த்தாலும் நாங்கள் கள்ளக்குறிச்சி சென்ற போது அரசு மதுக்கடை மதுபானத்தில் போதை போத வில்லை என்று தான் கள்ளச் சாராயத்தை நோக்கிச் செல்வதாக அங்குள்ளவர்கள் கூறினர். அரசு மதுக்கடை மதுபானத்தின் தரம் ஆய்வு செய்யப்படுகிறதா? என்றால் கேள்விக்குறி தான்.

தி. மு. க. அரசு செயல்படவில்லை என்று சிரேஷ்ட அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார்.

கள்ளச்சாராய உயிரிழப்புக்கு தேடிச் சென்று 10 இலட்சம் ரூபாய் வழங்கும் நிலையில், தேர்தல் பணியில் ஈடுபட்ட பொலிஸாருக்கு சிறப்பு கொடுப்பனவை தமிழக அரசு வழங்கவில்லை. இது கண்டனத்துக்குரியது- என்றார். (எ)

# செந்தில் பாலாஜி தரப்பில் புதிதாக மனுக்கள் தாக்கல்

சென்னை, ஜூலை 03

சட்டவிரோத பணப்பரி மாற்ற தடைச்சட்ட வழக்கின் விசாரணையை வேண்டுமென்றே தாமதப்படுத்தும் நோக்கிலேயே செந்தில் பாலாஜி தரப்பில் புதிதாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வருவதாக அமுலாக்கத் துறை தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத பணப்பரி மாற்ற வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனு மீதான உத்தரவை ஒத்தி வைக்கக்கோரி செந்தில் பாலாஜி தரப்பில் மீண்டும் புதிதாக மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில், போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக்கூறி மோசடி செய்ததாக தொடரப்பட்டு, சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் விசாரணை முடியும் வரை, அமுலாக்கத் துறை வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் எனக் கோரிய மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்டுள்ள மேன்முறையீட்டு வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அதிகாரிகளைப் பூட்டி வைத்து அச்சுறுத்திய மருந்தக உரிமையாளர்!

## யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது



**யாழ்ப்பாணம், ஜூலை 03**

**யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரை பூட்டி வைத்த கடை உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.**

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் உள்ள மருந்தகமொன்றிலேயே குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாடு நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக மருந்தகமொன்றைச் சோதனையிட சென்றனர்.

சோதனையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கும்போது அதிகாரிகளை கடை உரிமையாளர் மருந்தகத்திற்குள் வைத்துப் பூட்டி அச்சுறுத்தியுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு

பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரை கைது செய்தனர். (அ)

# தயாசிறியை நீக்க இடைக்காலத் தடை!

கொழும்பு, ஜூலை 03

சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை மற்றும் செயலாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை நீக்குவதற்கு, கட்சி எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து தன்னை நீக்குவதற்கு எதிராக தயாசிறி ஜயசேகர மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த அந்த மனுவை பரிசீலித்த, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 03

இந்திய அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் 934 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்துக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்காக இந்திய அரசினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மாவட்டத்தில் 3,000 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு 25-10-2016 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் முடிக்கப்படவிருந்தது. ஆனால் நிதி மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக, திட்டக் காலம் ஜூன் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் மீதமுள்ள நிதியில் 934 மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை அமைக்க நீதி, சிறைத்துறை மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. (அ)

# ரயிலில் இருந்து தப்பியோடிய சாரதி பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 03

சர்ச்சைக்குரிய ரயில் இயந்திரச் சாரதி பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் சாரதியின் தவறான நடத்தை காரணமாக திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் முற்பகல் 10.40 மணியளவில் கொழும்பில் இருந்து கண்டி நோக்கி புறப்படத் தொடங்கிய ரயிலின் சாரதி அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு சர்ச்சைக்குரிய வகையில் நடந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி நகருக்கு அருகில் உள்ள சுடுஹும்பொல என்ற இடத்தில் ரயிலை நிறுத்தி விட்டு ரயிலில் இருந்து தப்பி ஓடியபோது, ரயிலில் இருந்த பயணிகள் அவரை துரத்திச் சென்று பிடித்து, உதவிச் சாரதியை ஈடுபடுத்தி ரயில் கண்டி ரயில் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பின்னர், குடிபோதையில் இருந்த ரயில் சாரதியை ரயில்வே போக்குவரத்து ஆய்வாளர் மூலம் ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# விசேட நடவடிக்கையின் கீழ் நாடு முழுவதும் 49 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 03

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்ற விசேட நடவடிக்கையில் 34 சந்தேகநபர்கள் உட்பட 49 பேர் கைது செய்யப்பட்டதாக கரையோர பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் 13 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றத்தடுப்பு விசேட கடமையின் கீழ் கொச்சிக்கடை தேவாலயம் மற்றும் ஜம்பட்டா போதிக்கு அருகில் உள்ள வீதியை மூடி சுமார் 2 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

மேலும் இந்த விசேட நடவடிக்கைக்காக, எட்டு பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் 30 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் போதைப்பொருள் கையாள்வதில் விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகளும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மருந்துகளுக்கான விசேட வர்த்தமானி!

கொழும்பு, ஜூலை 03

மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான முறைமையை அறிமுகப்படுத்தும் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மருந்தின் அளவு வடிவம் மற்றும் வலிமை தொடர்பாக வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மையை உறுதி செய்வதே இந்த விலை நிர்ணய முறையின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரு வழிகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த விலை நிர்ணயம் முறையில் சர்வதேச மற்றும் உள்நாட்டில் பயன்படுத்தப்படும் விலை, தகவல்கள் மற்றும் ஆதாரங்களையே பயன்படுத்தவேண்டும் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசியம் விலை போகாமல் பாதுகாத்த பெருந்தலைவர் சம்பந்தன்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்!

கொழும்பு, ஜூலை 03

தமிழ் தேசிய அரசியலை கெடுபிடிகளுக்குள்ளிருந்து பாதுகாத்து, சர்வதேசமயப்படுத்திய மிகச்சிறந்த மிதவாத தலைவர் சம்பந்தன் ஐயா என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் மறைவையிட்டு அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலை அரசியலில் சிறுபான்மைச் சமூகங்களை சமபார்வையுடன் நோக்கிய தலைவர் சம்பந்தன் ஐயா. நீண்ட அரசியல் வரலாற்றனுபவமுள்ள இவர், தமிழ் தேசிய அரசியலை மிகச் சாதுர்யமாக வழிநடத்தினார்.

ஜனநாயகத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையால், கெடுபிடியான காலங்களில்கூட தமிழ்த்தேசிய அரசியல் விலை போகாமல் பாதுகாக்கப்பட்டது. தொண்ணூறு வயதைக் கடந்திருந்தாலும் தீர்வைப் பெற வேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது.

ஒரே வாழிடத்தில் ஒரே மொழி பேசுவோராக வாழ்ந்த சிறுபான்மைச் சமூகங்களை, சம பார்வையில் நோக்கிய பெருந்தகையும் இவர்தான். தமிழ், முஸ்லிம் முரண்பாடுகள் ஒரு மொழித் தேசியத்தை (தமிழ்) சிதைக்கக் கூடாதென்பதற்காக முஸ்லிம் தலைமைகளுடன் நல்லுறவைப் பேணி வந்தார். இன்று வரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப்பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற தலைமைகளே அவசியம்.

காலம் சென்ற சம்பந்தன் ஐயாவின் கடந்தகால வரலாறுகளிலிருந்து ஒற்றுமைக்கான பல படிப்பினைகளை நான் காண்கிறேன். இவரது வழிகாட்டல்களில் சமாதானத்துக்கான கதவுகள் திறந்தேயிருந்தன. உரிமை அரசியல் விலைபோகக் கூடாது என்பதற்காக தனக்கு வந்த அரிய பல வாய்ப்புக்களையும் அவர் தியாகம் செய்திருந்தார்.

இனிவருங்காலங்களில் தென்னிலங்கை அரசியலில் ஏற்படப் போகும் மாற்றங்கள் மற்றும் தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு தீட்சண்யமான தலைமை தமிழருக்கு அவசியம். இந்தத் தலைமைகளுடன் தான் முஸ்லிம் தலைமைகளும் இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் ஆண்டவனின் அருட்கடாட்சம் கிடைக்கட்டும்-என்றார். (அ)

# "இனிமேல் தேர்தலில் போட்டியிடமாட்டேன்!"



கொழும்பு, ஜூலை 03

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலிலோ, பொதுத் தேர்தலிலோ தான் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் பொலன்னறுவை மாவட்டத்தில் தனது மகன் தஹாம் சிறிசேன போட்டியிடுவார் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தாம் சுதந்திரக் கட்சியின் அரசியலை தொடர்ந்து முன்னெடுப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# சிறைச்சாலையிலிருந்து தப்பிய இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 03

நீதிமன்றினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்ற நிலையில் தேடப்பட்டு வந்த நிலையில் இருந்த நிலையில், பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றில் சுமார் 65 கிலோமீற்றர் தூரம் வரை கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றதுடன், சுமார் 6 கிலோமீற்றர் தூரம் ஆறு ஒன்றை கடந்து காடு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் பொலிஸ் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி குறித்த இரண்டு கைதிகளும் தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் ஒப்பந்தத்தின் பின்னரே நாடு சுவாசிக்க தொடங்கியது!

## கூறுகிறார் பந்துல குணவர்த்தன



கொழும்பு, ஜூலை 03

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டத்திற்குப் புறம்பாக செயற்பட எவரேனும் கனவு கண்டால், இந்த நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கடந்த காலங்களில் திறைசேரியில் டொலர் கையிருப்பு இருக்கவில்லை. நாட்டினால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயுக்கான வரிசைகள் உருவாகின. சமூகம் முழுமையாக வெறுப்புக் கலந்த சமூகமாக மாறி, நாடு முழுவதும் போராட்டங்கள் ஏற்பட்டன.

நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராதவேளையில், பிரதமராகவும், முதிர்ந்த அரசியல்வாதியாகவும் அனுபவம் வாய்ந்த ரணில் விக்ரமசிங்க அந்தச் சவாலை ஏற்று நாட்டை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்.

அவர் செய்த முதல் விடயம், சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது தான். அதனை வெற்றியடையச் செய்ய பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். ஒரு நாடு என்ற வகையில் இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்ததால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்குச் செல்ல முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தின் பின்னரே, நம் நாடு சுவாசிக்கத் தொடங்கியது எனலாம்.

அரசியல் ரீதியில் யார் தலைவராக இருந்தாலும் சர்வதேச அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் கொடுக்கல் வாங்கல்களைப் பேண முடியாது.

நீடிக்கப்பட்ட கடன் வசதி ஒப்பந்தத்தின்படி, 2027 ஆம் ஆண்டு வரை கடன் ஒப்பந்தத்தில் ஈடுபட முடிந்துள்ளது.

எனவே நாங்கள் வருடந்தோறும் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். இன்னும் சில மாதங்களில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் அரச ஊழியர்களின் சம்பளம், சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும என்பன ஏழைகளுக்கு வழங்கப்படும். மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இல்லாமல், வரவு-செலவுத்திட்டத்தை 2027 வரை தயாரிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியம் 2025 வரவு-செலவுத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும்.

உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வரவுசெலவுத் திட்டத்திற்காக வழங்குகின்றது.

வரவு-செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கும்போது மேலும் 3655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணமாக கிடைக்கும் என நம்பப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இவ்வாறுதான் தயாரிக்கப்பட வேண்டும்.

தற்போது, 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. எவ்வாறாயினும், ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறையான திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தும் அதேவேளை, ஜனாதிபதி வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதில் எந்தவொரு ஒப்பந்தமும் வேலைத்திட்டமும் மறைக்கப்பட்டதல்ல. ஜனாதிபதி சகல தகவல்களையும் பாராளுமன்றுக்கு சமர்ப்பித்துள்ளார். அந்தப் பின்னணியில், இந்த உருவாக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தைத் தவிர்த்து எவராலும் அரசாங்கத்தை நடத்த முடியாது.

இந்தப் பொருளாதாரத் திட்டத்திற்குப் புறம்பாக யாராவது ஆட்சி செய்ய வேண்டும் என்று கனவு கண்டால், நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என்பதைக் கூற வேண்டும் -என்றார். (அ)

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பேச்சு வெற்றி!

கொழும்பு, ஜூலை 03

தமது கோரிக்கைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நேற்று முன் தினம் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்தக் கலந்துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப்பட்டதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் இணைத் தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்தார்.

சம்பளத்தில் 15 வீத வற் வரி அறவிடப்படுவது மற்றும் கல்விசாரா ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்படாதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2 மாதங்களாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன் காரணமாக 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் கடந்த 2 மாதங்களாக பாதிக்கப்பட்டிருந்தன.

மேலும் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்ததுடன் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, தங்களது கோரிக்கைக்கு சாதகமான தீர்வு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தரம் 9 மாணவர்களுக்கு புதிய கல்வி முறைமை!

## கல்வியமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 03

பாடசாலை பருவத்திலிருந்தே தொழில்முனைவு பற்றிய புரிதலும், பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாற்றமடையும் புதிய கல்வி முறையின் மூலம், 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் பெற்றோருடன் கலந்தாலோசித்து எதிர்கால வாழ்க்கையைத் தெரிவு செய்ய வாய்ப்பளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களைக் கொண்ட பிரஜையை உருவாக்குவது கல்வியின் அடிப்படை நோக்கம் என்றும், முன்பள்ளிக் கல்வியில் இருந்தே திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை வளர்ப்பதற்குத் தேவையான அடித்தளத்தைத் தயாரிப்பது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்காக யுனெஸ்கோ, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் பிற அறிஞர்களின் ஒத்துழைப்புடன் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது.

எதிர்காலத்தில் பாடசாலைகளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சமூக ஊடகங்களில் வரும் போலி கடிதம்!

## உண்மையில்லை என்கிறது பொலிஸ் தலைமையகம்

கொழும்பு, ஜூலை 03

சமூக ஊடகங்களில் வெளிவரும் போலி கடிதம் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.


குறித்த கடிதம் மஞ்சள் பின்னணியில் நீல நிற பொலிஸ் கையொப்பத்துடன் பொலிஸ் உத்தியோகபூர்வ சின்னத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், 2024 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் திகதி வெளியிடப்பட்டதாக தோன்றும் வகையில் இந்த கடிதம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இக்கடிதமும் அதன் உள்ளடக்கமும் முற்றிலும் போலியான கடிதம் எனவும், இலங்கை பொலிஸாரோ அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினாலோ இவ்வாறான கடிதம் எதுவும் வெளியிடப்படவில்லை என பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் போலி கடிதம் மற்றும் இணையத்தில் கடிதம் பிரசுரம் செய்யப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# அமெ. திறைசேரியின் உதவிச் செயலருடன் எதிர்க் கட்சித் தலைவர் விசேட சந்திப்பு!



கொழும்பு, ஜூலை 03

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவிற்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத் நாட்டுக்கு வருகைத் தந்துள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தி அன்றூ ஷின் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இரு தரப்பினரும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து பல்வேறு கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

விசேடமாக அரசாங்கத்தின் வரிக் கொள்கையினால் நாட்டு மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெளிவூட்டினார்.

மேலும், தேர்தல்கள் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படுவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டுள்ளன என்பது தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமெரிக்க திறைசேரி திணைக்களத்தின் ஆசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளரிடம் கருத்து வெளியிட்டார்.

இச்சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், இராதாகிருஷ்ணன், நிரோஷன் பெரேரா மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியில் இனியும் சரத் பொன்சேகா இருக்கமுடியாது

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 03

**பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இனியும் ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை கவனத்தில் எடுக்காது இருக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதியிடம் சென்று கட்சியை விமர்சிக்கும்போது அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் என கூற முடியாது எனவும் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொன்சேகா சுயாதீனமாக நின்று தேர்தலில் போட்டியிட்டு சுமார் 2000 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றாலும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறினால் கடந்த காலங்களைப் போல குறைவான வாக்குகளைப் பெற வேண்டிய ஒரு சூழல் உருவாகும்.

சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடமிருந்தும் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு தமக்குத் தேவையான விதத்தில் செயற்பட்டு வருகிறார்.

சரத் பொன்சேகா ஒரு பக்கம் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதவியிலிருந்து தம்மை விலக்கக்கூடாத வகையில் வழக்கு தொடர்ந்து மறுபுறம் ஐக்கிய மக்கள் சக்தியை விமர்சிக்கிறார்-என்றார். (அ)

# கஞ்சிப்பான இம்ரான் பிரான்ஸில் தஞ்சம்!

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 03

பிரபல பாதாள உலக தலைவன் கஞ்சிப்பான இம்ரானுக்கு பிரான்சில் அரசியல் பாதுகாப்பு கிடைத்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் பாதாள உலகத் தலைவர் ஒருவர் வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் பெறுவது இதுவே முதல் முறை என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச சிவப்பு அறிவிப்புப் பட்டியலில் கஞ்சிப்பான வின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் தலைமறைவாக இருந்த நிலையில், இலங்கையில் போதைப்பொருள் வலையமைப்பு மற்றும் பாதாள உலக செயற்பாடுகளை கஞ்சிப்பான இம்ரான் முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு மாகந்துரே மதுஷ், கஞ்சிப்பான இம்ரான் உள்ளிட்டவர்கள் டுபாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் சந்தேகத்தின் பேரில் இலங்கை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். எவ்வாறாயினும், மாகந்துரே மதுஷ் தப்பிச் செல்ல முயன்றபோது பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எனினும், சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சிப்பான இம்ரான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டு 2022ஆம் ஆண்டு மன்னாரில் இருந்து படகு மூலம் இந்தியாவிற்கு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அங்கிருந்து பிரான்சுக்கு தப்பிச் சென்று அங்கு அரசியல் தஞ்சம் பெற்றதாக குறித்தச் செய்தியில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் காஞ்சிப்பனவின் மனைவி தற்போது டுபாயில் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

# கடன் சீரமைப்பில் அரசு இரட்டை நிலைப்பாடு!

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 03

வெளிப்படைத்தன்மையுடனும் சமநிலையுடனும் அழுத்தங்களைப் பகிர்ந்துகொள்வதாக ஜனாதிபதி கூறினாலும், அரசாங்கம் இரட்டைக் கொள்கையையே கடைப்பிடித்துள்ளது. சர்வதேச பிணைமுறிதாரர்கள் தொடர்பில் ஒரு கொள்கையும், இந்நாட்டு மக்களுக்கு வேறு கொள்கையும் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது. கானா, ஜமைக்கா, ஈக்குவடார் போன்ற நாடுகள், நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இணக்கப்பாடுகளை செய்து கொண்டாலும், எமது நாட்டு ஜனாதிபதியாலும், அரசாங்கத்தினாலும் அவ்வாறான இணக்கப்பாட்டை எட்ட முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடன் மறுசீரமைப்பு மற்றும் இணக்கப்பாடு தொடர்பாக ஜனாதிபதி பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். ஒரு கட்டத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை கடன் மறுசீரமைப்பை மிக விரைவாக செய்து முடித்துள்ளதாக கூறியிருந்தார். அது பொய். கானா, அர்ஜென்ரீனா, ஈக்குவடோர், மங்கோலியா, பெலிஸ் மற்றும் பார்படோஸ் போன்ற நாடுகள் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளை, நமது நாட்டுக்கு முன்னதாக குறுகிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் பலவீனத்தால், கடனை திருப்பி செலுத்தும் காலத்தை நீட்டித்துக் கொள்ள முடியவில்லை.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது, 2028 ஆம் ஆண்டு வரை கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். என்றாலும் மார்ச் 2023 இல் சர்வதேச நாணய நிதியம் கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை 2033 வரை நீட்டித்தாலும், அந்த உடன்படிக்கைக்கு அரசாங்கத்தால் செல்ல முடியவில்லை. அரசாங்கம் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளின் பலவீனம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், சீன அரசின் 13.8 மில்லியன் டொலர்கள் கடன், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 538 மில்லியன் டொலர் கடன்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. சில தகவல்களை நாட்டுக்கு வெளியிடாமல் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டின் வெற்றியைப் பற்றி பேசுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் தயாரித்த தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் இன்றுவரை சபைக்கு சமர்ப்பிக்கவில்லை. அன்று பசில் ராஜபக்ச நிதியமைச்சருக்கு விரலை நீட்டி அறிக்கைகளை வழங்குமாறு கோரிய போதும், இன்று ஜனாதிபதியே அந்த அறிக்கைகளை வழங்காதிருக்கிறார். எனவே அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மடுவில் நேற்று திரண்டனர் பக்தர்கள்





மன்னார், ஜூலை 03

மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நேற்று காலை 6.15 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஹறோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தை தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் இடம்பெற்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றுள்ளது.

நேற்று மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஹறோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் மற்றும் மடு பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஆக தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து மடு அன்னைக்கு முடி சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இணைந்து முடி சூட்டி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் மன்னார் மறைமாவட்ட ஆயரினால் நூற்றாண்டு விழவை முன்னிட்டு ஏற்றி வைக்கப்பட்ட கொடி நேற்று செவ்வாய்க்கிழமை இறக்கி வைக்கப்பட்டதுடன், மடு அன்னையின் திருச்சொரூப பவனி மற்றும் மடு அன்னையின் ஆசீர்வாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

# சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த சிறிய ரக லொறி!

கொழும்பு, ஜூலை 03

நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் பயணித்த லொறி ஒன்றில் ஏற்பட்ட இயந்திர கோளாறு மற்றும் வாகனத்தின் தடை செயலிழந்ததன் காரணத்தால் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், லொறியில் பயணித்த இருவரும் மயிரிழையில் எந்தவித காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற நானுஓயா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், குறித்த லொறியினை பாரம் தூக்கியின் துணையுடன் மீட்டெடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களை தாக்கியவர்கள் கைது செய்யப்பட வேண்டும்!

## இல்லையேல் போராட்டம் தொடரும்

திருகோணமலை, ஜூலை 03

**ஊழியர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடிவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்தில் நகராட்சி மன்ற அனைத்து ஊழியர்களும் இணைந்து தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் என்று ஊழியர் சங்கங்கள் எச்சரித்துள்ளன.**

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய கடைத்தொகுதியில் கடந்த வாரம் கசிப்பு விற்பனை செய்த கடையிலுள்ள பொருட்களை அகற்றி சீல் வைக்க பொலிஸ் பாதுகாப்புடன் நகராட்சி மன்றச் செயலாளர் தலைமையில் ஊழியர்கள் சென்ற வேளையில் நகராட்சி மன்ற ஊழியர்கள் இருவர் குறித்த பிரதேசத்தில் இருந்த நபர்கள் சிலரால் தாக்குதலுக்கு உள்ளாகினர்.



பொலிஸார் பாதுகாப்பு கடமையில் இருந்த நிலையில் இவ்வாறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதனை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், நகர சபையின் ஊழியர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இவ் விடயத்தை தொழிற்சங்கம் ஒன்றிணைந்து வன்மையாகக் கண்டிப்பதுடன், பொலிஸார் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதற்கு நகராட்சி மன்ற வேலைத்தள மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சங்கம் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன ஆதரவு வழங்கி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, உரிய இடத்துக்கு வருகை தந்த நகராட்சி மன்றச் செயலாளர் ஜெயவிஷ்ணு, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பார்த்தீபன் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் இவ் விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். தாக்குதல் நடத்தியவர்களை உடன் கைது செய்யும் பட்சத்தில் பகிஷ்கரிப்பை கைவிடுவதாகவும், இது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் நகராட்சி மன்ற அனைத்து ஊழியர்களும் இணைந்து தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட உள்ளதாக நகராட்சி மன்ற வேலைத்தள மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சங்கம் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன தெரிவித்துள்ளன.

(எ-4)

# வீரமுனை கோபுர விவகாரம் ஆளுநர் நல்லிணக்க முயற்சி

சம்மாந்துறை, ஜூலை 03

நீண்ட காலமாக தமிழ் - முஸ்லிம் மக்களிடையே சம்மாந்துறை வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பது தொடர்பில் இடம்பெற்று வந்த பிரச்னைக்கு சுமூகமாகத் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்காக வரவேற்புக் கோபுரம் அமைக்கப்படும் பகுதிக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சென்று வரவேற்பு கோபுரம் அமைக்கப்படும் இடத்துக்கும் வீரமுனை கோவிலுக்கும் உள்ள தூரத்தை பார்வையிட்டார்.

அம்பாறை, சம்மாந்துறை வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டினால் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் குறித்த இடத்தை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட ஆளுநர் வருகை தந்ததுடன் குறித்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலானது மூடிய அறையினுள் நடைபெற்றதுடன் ஊடகங்களுக்கு செய்திகளை சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம் அதாவுல்லா, பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, கட்டட நிர்மாண அமைச்சுகளின் செயலாளர் எம். கோபால இரத்தினம், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம். ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். முகம்மட், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் எம். ஐ. எம் றனுஸ், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ. சீ. எம். சகில், ஐக்கிய தேசியக் கட்சி சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் வாஸித், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், வீரமுனை கோவில் நிர்வாக சபையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன் குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பதில் தமிழ் - முஸ்லிம் உறவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வுகாண முயற்சிக்கின்றோம். பாராளுமன்ற உறுப்பினர்களான அதாவுல்லா, கலையரசன், பள்ளிவாசல் தலைவர், கோவில் தலைவர், பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்கள தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் போன்றவர்களிடம் இதற்கு பொறுப்பான திணைக்களத்தின் வரை படங்களையும் மற்றும் வளைவு கோபுரம் அமைக்கும் பகுதியில் காணப்படும் தமிழ் - முஸ்லிம் மக்களின் குடும்ப எண்ணிக்கை விவரங்கள் போன்றவற்றை சமர்ப்பிக்குமாறும் இதற்கான தீர்வை ஒருமாதம் பத்து நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவர்கள் ஊடாகப் பெற்றுத்தருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

(எ)

# புதிய அதிபர் காரியாலயம், நடைபாதை திறந்து வைப்பு

காரைதீவு, ஜூலை 03

அம்பாறை, காரைதீவு மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் புதிய அதிபர் காரியாலயம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடங்களுக்கு இடையிலான நடைபாதை ஆகியவற்றை திறந்து வைக்கும் விழா திங்கட்கிழமை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கிய ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட புதிய அதிபர் காரியாலயம் மற்றும் வகுப்பறை கட்டடங்களுக்கு இடையிலான நடைபாதை ஆகியவற்றை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

"கல்வி சிறக்கும் வழி திறக்கும் விழா" எனும் தொனிப்பொருளில், மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் எம். ஐ. எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம், காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுல நாயகி சஜிந்திரன், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. சஞ்ஜீவன் உள்ளிட்ட விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

(எ)



# தீர்வுக்கான பயணத்தில் மிகப்பெரும் இடைவெளி

## சம்பந்தனின் மறைவுக்கு ரெலோ இரங்கல்

மட்டக்களப்பு, ஜூலை 03

தமிழ் மக்களால் தமிழ்த் தேசியப் பெருந்தலைவராகப் பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முதுபெரும் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்னைத் தீர்வுக்கான பயணத்தில் பாரியதொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது அரசியல் ரீதியாகச் செயல்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஓர் பேரிழப்பாகும்.

2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தலைமை தாங்கி வழிநடத்தி வந்த இரா. சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக்காலங்களில் மனம் நொந்திருந்தார். அந்தவகையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக்கடனாகும்.

ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியை இழந்து துயருறும் தமிழ் மக்கள், அவருடைய குடும்பத்தார், அவருடைய கட்சியினர், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# பொத்துவிலில் விபத்து; இஸ்ரேல் பிரஜை பலி!

பொத்துவில், ஜூலை 03

பொத்துவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் - உழவு இயந்திரம் மோதி இடம்பெற்ற விபத்தில் இஸ்ரேல் பிரஜை ஒருவர் பலியானார்.

பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

பொத்துவில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த உழவு இயந்திரத்தின் பின்புறம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி பொத்துவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவர் 23 வயதுடைய இஸ்ரேலியர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இஸ்ரேல் இராணுவ தாக்குதலில் 20 ஹமாஸ் போராளிகள் பலி!

காஸா, ஜூலை 03

**காஸாவின் ரபா நகரில் பீரங்கியைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையை வீசிய ஹயமாஸ் போராளியை இஸ்ரேல் இராணுவத்தினர் வான்வழித் தாக்குதல் நடத்திக் கொன்றனர். இதேவேளை, இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர் 20 கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

காஸாவின் வடக்கே ஷெஜாயா நகரில் இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த ஹமாஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், அவர்களில் பலர் கொல்லப்பட்டனர்.

தெற்கு காஸாவின் ரபா நகரில், பீரங்கியைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையை வீசிய போராளியை இராணுவத்தினர் வான்வழித் தாக்குதல் நடத்தி கொன்றனர்.

இதேபோன்று, மத்திய காஸா பகுதியில் நெட்ஜரீம் என்ற இடத்தில், வீரர்கள் மீது ஏவுகணை வீசித் தாக்குதல் நடத்திய போராளியை ஆளில்லா விமான உதவியுடன் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். மொத்தம் 20 பயங்கரவாதிகள் வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# நடுவானில் திடீரென குலுங்கிய விமானம்


## 40 பயணிகள் காயம்

பிரேசிலியா, ஜூலை 03

ஸ்பெயினிலிருந்து உருகுவேக்கு சென்ற ஏர் யூரோப்பா விமானம் நடுவானில் குலுங்கியதால் 40 பயணிகள் காயமடைந்தனர். இதனால், அவசர நிலையைக் கருத்தில் கொண்டு அந்த விமானம் பிரேசிலில் தரையிறக்கப்பட்டது.

திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனையடுத்து பிரேசிலின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தில் அந்த விமானம் தரையிறக்கப்பட்டது. இதனை ஏர் யூரோப்பா விமான நிலையம் உறுதி செய்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த பயணிகளில் 30 பேருக்கு விமான நிலையத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும், 10 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ)



# சீனாவில் சோதனையின்போது மலையில் மோதிய ரொக்கெட்

பீஜிங், ஜூலை 03

சீனாவின் ஹெனான் மாகாணத்தின் காங்யி கவுண்டியில் உள்ள ஏவுதளத்தில், தியான் லாங் - 3 ரொக்கெட்டின் அடுத்தகட்ட சோதனை நடத்தப்பட்டது. அப்போது, எதிர்பாராத விதமாக ரொக்கெட் சீறிப் பாய்ந்து சென்றது. பின்னர் அந்த ரொக்கெட் வெடித்து தீப்பிடித்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அது கோங்கி நகரின் மலைப்பாங்கான பகுதியில் விழுந்தது. ரொக்கெட் சோதனைக்கு முன்னதாக அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டதால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று ஸ்பேஸ் பயோனீர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்லிங்குடன் ஒப்பிடும் வகையில் சீனா தனது செயற்கைக்கோள் தொகுப்பை விண்ணில் நிறுத்துவதற்காக மீண்டும் பயன்படுத்தக்கூடிய ரொக்கெட்களை பயன்படுத்தவுள்ளது. இந்த ரொக்கெட்டுகளை உருவாக்கும் பணிகளில் பல தனியார் விண்வெளி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இதில், ஸ்பேஸ் பயோனீர் என்ற நிறுவனம் மிகவும் சக்திவாய்ந்த தியான்லாங் - 3 என்ற ரொக்கெட்டை உருவாக்கி வருகிறது. இந்த ரொக்கெட்டின் பல்வேறு நிலைகள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் நடந்த ரொக்கெட் சோதனை தோல்வியடைந்தது.

# வீதியை கடக்க காத்திருந்தவர்கள்மீது கார் மோதியதில் 10 பேர் உயிரிழப்பு!

சியோல்,ஜூலை 03

தென்கொரியாவின் தலைநகர் சியோலின் பரபரப்பான வீதியில் நேற்று முன்தினம் இரவு பயங்கர விபத்து இடம்பெற்றது.

சியோலின் சிற்றி ஹால் நகரில் வீதியைக் கடக்க சமிஞ்சை பகுதியில் மக்கள் நின்றுகொண்டிருந்தனர். அப்போது, வீதியின் மறுபுறம் கட்டுப்பாட்டையிழந்து வேகமாக வந்த கார், மக்கள் மீது மோதியது. இந்தக் கோர விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர்.



இதனையடுத்து, விரைந்து வந்த பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திய கார் சாரதியைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் கார் திடீரென வேகமாக சென்றதாகவும், பிரேக் செயல்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (எ)

# பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் தீவிர வலதுசாரிகள் முன்னிலை

பாரிஸ், ஜூலை 03

பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள் முன்னிலைபெற்றுள்ள அதேவேளை ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் கட்சி மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகளுக்கு எதிரான ஆர். என். கட்சி 33 வீத வாக்குகளைப் பெற்றுள்ள அதேவேளை இடதுசாரி கூட்டணி 28 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மக்ரோனின் அரசியல் கட்சி கூட்டணிக்கு 21 வீத வாக்குகள் கிடைத்துள்ளதாக பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலின் முதல் சுற்றில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெற்றுள்ளமை அதன் வரலாற்றில் இதுவே முதல்தடவை. (எ)


# பாகிஸ்தானில் கனமழை 8 பேர் பலி; 24 பேர் காயம்!

இஸ்லாமாபாத், ஜூலை 03

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் பகுதியில் பெய்து வரும் கனமழை மற்றும் நிலச்சரிவால், குவெட்டா மற்றும் இஸ்லாமாபாத் நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையின் பெருமளவிலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பலூசிஸ்தான் பகுதியில் பெய்து வரும் தொடர் கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில், சிக்கி 8 பேர் பலியாகினர். 24 பேர் காயமடைந்தனர். 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இதேபோன்று, ஷெரானி மாவட்டத்தில் தனசார் மற்றும் தேரா இஸ்மாயில் கான் பகுதிகளுக்கு இடையே நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. குவெட்டா மற்றும் இஸ்லாமாபாத் நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையின் பெரு



மளவிலான பகுதியும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டன.


பேருந்துகள், கார்கள் மற்றும் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறிகள் என்பன வீதியில் வரிசையாக நின்றன.(எ)

# லெபனானில் போர்ப் பதற்றம்!

பெய்ரூட்,ஜூலை 03

போர்ப்பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் லெபனானை விட்டு உடனடியாக வெளியேறுமாறு தனது நாட்டு மக்களுக்கு சவுதி அரேபியா அறிவுறுத்தியுள்ளது.

இஸ்ரேல் - காஸா இடையிலான போர் கடந்த 8 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் காஸாவுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் இஸ்ரேல் எல்லைப்பகுதிகளில் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டும் வருகின்றனர். மேலும் இஸ்ரேலின் வடக்கு பகுதிகளை ஆக்கிரமிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.



எனவே, லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்களையும் முழுமையாக அழித்து - ஒழிக்க இஸ்ரேல் உறுதிபூண்டுள்ளது. இதனால், அங்கு போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது. எனவே, லெபனானில் வசிக்கும் தனது நாட்டின் மக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு சவுதி அரேபியா அறிவுறுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கில் நேற்று அதிகாலை வீடுகளுக்குள் நுழைந்து வாள்வெட்டு!

## இரண்டு பேர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜூலை 03

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலிநகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

அதிகாலை 3 மணி அளவில் பாலிநகர் பகுதியில் இரு வீடுகளுக்குள் வாள்களுடன் நுழைந்த குழுவினர் குறித்த வீட்டில் இருந்த இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த இருவரும் மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழ். தமிழ்ச் சங்கத்திற்கு புதிய நிர்வாகக் குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்திற்குப் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் பெருந்தலைவராக பேராசிரியர் அ. சண்முகதாசும் தலைவராக பேராசிரியர் தி. வேல்நம்பியும் செயுலாளராக செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் பொருளாளராக லோ. துஷிகரனும் உபதலைவர்களாக அருட்பணி ஜெரோ செல்வநாயகம், சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், பேராசிரியர் சி. செல்வரஞ்சிதம், பா. பாலகணேசன் ஆகியோரும் உபசெயலாளர்களாக கு.பாலசண்முகன், முனைவர் கி. அருட்செல்வி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இருபத்தொரு உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இதேவேளை தமிழ்ச்சங்கத்திற்கான அலுவலகமாக கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள அறிவாலயத்தை (விரிவுரையாளர் சர்வேஸ்வரா இல்லம்) பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# அச்சுவேலியில் "அர்ச்சனைப் பூக்கள்" இசைப்பேழை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 03

அச்சுவேலி காட்டுவளவு கந்தசுவாமி மீது பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப் பேழை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை இரவு 9.15 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ச. சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வரவேற்புரையை அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆற்றுவார். ஆசியுரையை ஆலயபிரதம குரு சீ.சி.சி. சிவானந்தம் ஐயர் வழங்குவார். யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் பண்டிதை தவபாலன் சியாமினி, சைவப்புலவர் கி. வரதராசா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். ரஜரட்டை பல்கலைக்கழக மாணவி பா. அர்ச்சனா ஏற்புரை வழங்குவார். (அ)

# தமிழ்-முஸ்லிம் உறவு பாலமாக விளங்கிய ஆளுமை சம்பந்தன்!

## ரவூப் ஹக்கீம் அனுதாபம்



நிந்தவூர், ஜூலை 03

தமிழ் சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்திருக்கிறது - இவ்வாறு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இரா. சம்பந்தனின் மறைவு குறித்து அவர் அனுப்பி வைத்த அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்னையில் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக சிறுபான்மை சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக தனது வாழ்நாள் பூராவும் அயராது பாடுபட்ட அரசியல் ஆளுமையான சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தேன்.

தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊடாக பாராளுமன்றத்தில் பிரவேசித்து, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 2001 ஆம் ஆண்டிலிருந்து அண்மை காலம் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகத் திகழ்ந்து, அது தோற்றம் பெற்றதிலிருந்து அதனை சிறப்பாக இருந்து வழி நடத்திய ஆளுமையாக இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா வரலாற்றில் இடம் பெறுகிறார்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகள் வழங்கி வந்த "நிறைவேறாத" வாக்குறுதிகளை மையப்படுத்தியதாக அவரின் வாதங்கள் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் ஆணித்தரமாகவும் ஆக்ரோஷமாகவும் ஓங்கி ஒலித்ததால் பேரினவாத சக்திகளுக்கு சம்பந்தன் சிம்ம சொப்பனமாகத் தோற்றமளித்தார்.

தந்தை செல்வாவின் காலத்தில் இருந்து மரபு ரீதியாக பின்பற்றப்பட்டு வந்த தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டம் பின்னர் நாளடைவில் மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலைகள் காரணமாக திசை மாறிய போதிலும்கூட, அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதான பேச்சுகளை தமிழர் தரப்புகளுக்கும் சிறுபான்மையினருக்கும் ஏற்புடையதான விதத்தில் கருத்தொருமைப் பாட்டைகாணும் நோக்குடன் முன்னெடுப்பதில் சம்பந்தன் ஐயா நாட்டம் கொண்டிருந்தார்.

இனப் பிரச்னைக்கான தீர்வைப் பொறுத்தவரை அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு அங்கு வாழும் முஸ்லிம்களின் இணக்கப்பாடு இன்றி சாத்தியமாகிவிடாது என்பதில் சம்பந்தன் ஐயா மிகுந்த உறுதியாக இருந்துவந்தார். அதனை அவர் தனது சொல்லிலும் செயலிலும் தெளிவாக வெளிக்காட்டினார்.

பிற்காலத்தில் முதிர்ந்த வயதில் உடல்நிலை தளர்ந்திருந்த போதிலும்கூட, சக்கர நாற்காலியில் பாராளுமன்றத்திற்கு வருகை தந்த போதிலும் அவரின் ஆற்றோட்டமான பேச்சாற்றல் அருகியிருக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவரது நினைவாற்றல் மெச்சத்தக்கது.

நாட்டில் இக்கட்டான சூழ்நிலையில், மிகவும் முக்கியமான காலகட்டத்தில் அவரது இழப்பு நேர்ந்திருப்பது வருந்தத்தக்கதாயினும், அவருக்குச் செலுத்தக்கூடிய நன்றி கடன் இனப் பிரச்னைக்கான தீர்வில் தமிழ் மக்களும் தமிழ் பேசும் மக்கள் உள்ளடங்கிய சிறுபான்மையினரும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுகளில் ஈடுபடும்போது குறைந்தபட்ச சேதாரங்களோடு அவசியமான விட்டுக்கொடுப்புகளை ஒவ்வொரு தரப்பும் செய்து நாட்டில் நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு பாடுபடுவதாகும் - என்றுள்ளது. (ஐ-06)

# அரச புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக மனித உரிமை ஆர்வலர் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 03

கொரோனா பெருந்தொற்று காலத்தில் பலவந்தமாக உடல்களை தகனம் செய்தமை தொடர்பில் தான் தெரிவித்த கருத்திற்காகத் தன்னை 2020 கைது செய்தமை தொடர்பில் இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக மனித உரிமை செயற்பாட்டாளர் சிரந்த அமரசிங்க முறைப்பாடொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தான் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொவிட் நீரில் பரவாது எனத்தான் தெரிவித்த கருத்திற்காக அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் பேரில் தன்னை சி.ஐ.டியினர் கைது செய்துள்ளனர் என மனித உரிமை செயற்பாட்டாளர் கூறினார்.

தனக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைச் கூட சுமத்தால் சி.ஐ.டியினர் அவ்வேளை தன்னை கைது செய்தனர் என அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தான் சனல் 4 விவரணச் சித்திரத்துக்கு தெரிவித்த கருத்துக்காகவும் கைது செய்யப்பட்டதாக சிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# மாணவிகளைத் தடுத்து வைத்து அச்சுறுத்திய இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 03

கண்டி - பன்வில பகுதியில் 5 பாடசாலை மாணவிகளை தடுத்து வைத்த இளைஞர்களால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சை செயலமர்வில் கலந்துகொண்ட 5 மாணவிகளே இவ்வாறு தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சை செயலமர்வு நிறைவடைந்த நிலையில் 10 வயதான 5 மாணவிகள் வீட்டுக்கு சென்றுக் கொண்டிருந்தபோது 17 வயது மதிக்கத்தக்க 3 பேர் மாணவிகளை இடைமறித்து தடுத்து வைத்துள்ளனர்.

இதன்போது குறித்த இளைஞர்களிடமிருந்து தப்பிச்செல்ல முயற்சித்த மாணவி ஒருவர் மீது இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாணவிகள் வீடு திரும்பாததை அடுத்து மாணவி ஒருவரின் தந்தை தேடிச் சென்றபோது மாணவிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அவதானித்து இளைஞர்களிடமிருந்து மாணவிகளை மீட்டுள்ளார்.

இதன்போது மாணவிகளை தடுத்து வைத்திருந்ததாக கூறப்படும் இளைஞர்கள் அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூன்று இளைஞர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றைய சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# மீன் குத்தி மீனவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 03

குருநகர் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் முரல் மீன் குத்தி மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர் குருநகரைச் சேர்ந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதான மைக்கேல் கொலின் டினோ என தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜேந்திர...

தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளை தொடர்ந்து, கஜேந்திரகுமாருக்கு ஜூலை 2ஆம் திகதியிலிருந்து 3 மாத விடுமுறை வழங்க எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல முன்மொழிந்தார்.

இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதையடுத்து, கஜேந்திரகுமாருக்கு 3 மாத கால விடுமுறை அளிக்க சபை இணக்கம் அளித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் வெளிநாடொன்றில் தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய...

வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகிறார் என்று கூறப்பட்டது. எனினும், ஜனாதிபதி இதனை மறுத்திருந்தார்.

எனினும், தேர்தல் பிரசாரங்களை கட்சிகள் ஆரம்பித்துள்ளபோதிலும் தேர்தல் நடந்தால் தற்போதைய தோல்வியடைவது உறுதி என்பதால் தேர்தலைப் பிற்போட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பூநகரி...

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதி ஒழுக்கம் குறித்து பேசும் ஜனாதிபதி இந்த சபையில் பூநகரி திட்டம் குறித்து பேசினார். 700 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி நிலையம் அமைக் கப்படும் என்று கூறப்பட்டு, இறுதியில் வேறு நாட்டில் உள்ள சோலர் பனல் விநியோகஸ்தரிடம் வழங்கி அந்த உரிமப் பத்திரத்தை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

500 மெகாவாட்ஸ் ஆற்றல் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையத்திலும் பெரும் நிதி மோசடி நடந்துள்ளது. இதுதான் ஜனாதிபதியின் நிதி ஒழுக்கமா என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

## அதிகார...

வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை.

மிகவும் கடினமான காலகட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூருகிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காக பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும் போது "ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்தபோது, 1948இல் நாடு சுதந்திரம் பெறுவதை பார்க்க சென்றிருந்தேன்" என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார். அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்க வில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை.

ஆனால், அதிகார பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்காகப் போதுமான பங்கை செய்துள்ளார். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## நீதிமன்றில்...

வருவதாவது,

கண்டி நீதிமன்ற வளாகத்தில் நேற்று வெடிகுண்டு இருப்பதாக 119 பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து நீதிமன்றின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டன. அத்துடன், பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸ், இராணுவம் ஈடுபடுத்தப்பட்டு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எனினும், எந்த வெடிகுண்டும் மீட்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பொலிஸாருக்கு தகவல் அளித்தவர் என்று கருதப்படும் நபர் கைது செய்யப்பட்டார். அவரின் கைபேசி எண்ணிலிருந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர் 53 வயதான கினிகத்தனையை சேர்ந்த நபராவார். எனினும், அவர் தனது கைபேசி தொலைந்து விட்டதாகக் கூறியுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## வடக்கில்...

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் 3,974, கொழும்பில் 6,344, கம்பஹாவில் 2,820 டெங்கு நோயாளர்களும் பதிவாகினர். இந்த ஆண்டில் 10 டெங்கு மரணங்களும் இடம்பெற்றன என்றும் நேற்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கடன்...

அரசியல் இலக்குகளுக்கு அதனை நம்பிக்கையுடன் பார்க்க மறுத்துவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப் பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி தற்போது கிடைத்துள்ளது. கடந்த ஜூன் 26 ஆம் திகதி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களாக இருதரப்பு கடன் வழங்குநர் குழு மற்றும் பாரிஸ் கிளப்பின் நாடுகளுடன் உடன்பாடுகள் - ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அதே தினம் சீனா எக்சிம் வங்கியுடன் உடன்பாடு எட்டப்பட்டு ஒப்பந்தம் எட்டப்பட்டது. இவ்வாறு, கடன் மறுசீரமைப்பு தொடர்பான இரண்டு அத்தியாவசிய விடயங்களை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். மேலும், இலங்கையில் இந்தக் கடனை மறுசீரமைப்பது குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் உள்ளது. ஆனால் இந்த நாட்டில் உள்ள சில தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நற்செய்தியாகப் பார்க்க மறுக்கின்றன.

2032ஆம் ஆண்டுக்குள், அரச கடன் தொகை மொத்தத் தேசிய உற்பத்தியில் 95வீதம் வரை குறைக்கப்பட வேண்டும். 2027 மற்றும் 2032 காலகட்டத்தில் மொத்த நிதித் தேவை 13வீதம் வரை குறைக்கப்பட வேண்டும். 2027-2032 காலகட்டத்தில் வெளிநாட்டுக் கடன் சேவையும் 4.5வீதம் வரை குறைக்கப்பட வேண்டும்.

இந்த 3 இலக்குகளை நிறைவு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கடன் மறுசீரமைப்புக்கு நாம் இப்போது உடன்பட்டுள்ளோம். இதன்படி, இந்த நாட்டுக்கான கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்காக நிலவிய அனைத்து நிச்சயமற்ற தன்மைகளும் தற்போது நீக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் நாட்டின் பணவீக்கம் 70 வீதத்திலிருந்து 1.7 வீதம் வரை குறைக் கப்பட்டுள்ளது. நாட்டின் திறைசேரி உண்டியல் ஏலத்தில், ஓராண்டு திறை சேரி உண்டியல்களின் வட்டி வீதம் 10 வீதத்தை எட்டியுள்ளது" என்றும் கூறினார். (ஐ)

## அரசியல்...

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரையை ஆற்றினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

எமது வெளிநாட்டு கடன் 3 ஆயிரத்து 700 கோடி அமெரிக்க டொலர்களாகும். இதில் ஆயிரத்து 60 கோடி டொலர் இரு தரப்பு கடன், ஆயிரத்து 170 கோடி டொலர்கள் பல்தரப்பு கடன், ஆயிரத்து 470 கோடி டொலர்கள் வணிகக் கடன், ஆயிரத்து 250 கோடி டொலர்கள் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை. கடனை வெட்டிவிடுதல், கடன் சலுகை காலம், கடனை மீளச் செலுத்தும் கால அவகாசத்தை நீடித்தல் உள்ளடங்கலான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் பல தரப்பினர் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இவற்றில் சில விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. சில விடயங்களில் பாதி உண்மையே இருந்தது.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பூகோள அரசியல் முன்னேற்றங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த சிக்கலான சவாலை சந்தித்தோம். இதனால், எமது இலக்குகளை நோக்கி பயணிப்பது இலகுவானதாக அமையவில்லை. கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஐ.எம்.எவ். வேலைத் திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வர முடிந்தது.

அடிப்படை கடனை மீள செலுத்துவதற்காக 2028ஆம் ஆண்டு வரை கால அவகாசம் எங்களுக்கு கிடைத்துள்ளது. வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வட்டி வீதம் 2.1 அல்லது அதற்கு குறைந்தளவில் தக்கவைக்க அனுமதி கிடைக்கும்.

கடனை முழுமையாக செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043ஆம் ஆண்டு வரை அவகாசம் கிடைத்துள்ளது. கடன் சேவை காலத்தை நீடிப்பதுடன் அடிப்படை கடனை மீளச் செலுத்தும் தொகையை தொடர்ந்து அதிகரிக்க முடியும். இதன் பலனாக வட்டியாக செலுத்த வேண்டிய 500 கோடி டொலர்களை சேமித்துக் கொள்ள முடியும்.

எனவே, பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அந்நியச் செலாவணியை அதிகரித்து கொள்ள வேண்டும். அரச அடிப்படை நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் கடனை மீளச் செலுத்தும் இயலுமையை அதிகரிக்க வேண்டும். இவற்றின் ஊடாக எதிர்காலத்தில் வலுவான நிலையில் இருந்து கடன் செலுத்துவதற்கான வாய்ப்பு கிட்டும். தற்போது நாம் ஆயிரம் கோடி டொலர் உள்நாட்டு இரு தரப்புக் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம்.

அடுத்தகட்டமாக ஆயிரத்து 470 கோடி அமெரிக்க டொலர்கள் வணிகக் கடன்களை மறுசீரமைக்க வேண்டியுள்ளது. இதற்கான பேச்சுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில நாட்களில் அந்த பணிகளை நிறைவுசெய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் பல வழிகளில் சலுகைக் கடன்களைப் பெற்றுத்தந்தன. அதுதவிர வேறெந்த நாட்டிடமும் நீண்ட கால கடன்களை வழங்க முடியாத நிலை இருந்தது. சில அரசியல் குழுக்கள் எமது வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகளை பரப்பி வருகின்றன.

வெளிநாட்டு கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள் தொடர்பாக சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றால் தனியாக இயங்க முடியாது. தனியாக இயங்கும் வகையில் வருமானத்தை நாம் ஈட்டவும் இல்லை.

அதனால், நாம் கடன்களையும், நிவாரணங்களையும் பெறநேரிடும். ஆனால், நாளாந்தம் உணவுத் தேவைக்காகவும், சம்பளம் வழங்கவும் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. சுதந்திரத்தின் பின் எமது நாடு செய்த பெரும் பிழை இதுவாகும்.

சில அரசியல் குழுக்கள், ஆட்சிக்கு வந்தவுடன் சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகின்றனர். வரியை குறைப்போம், சலுகைகளை வழங்குவோம் என்று ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். ஆனால், அதற்கான பணத்தை எப்படி திரட்டப் போகிறார்கள் என்பது தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசுவதில்லை. ஆனால், நான் அரசாங்கத்தை பொறுப்பேற்ற பின்னர் பல அரசாங்கங்கள் செய்த தவறுகளை நிறுத்தினேன்.

இலங்கை அன்னையை ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து எவ்வாறாவது மீட்டு வருவேன் என சபதமெடுத்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அனைத்து மக்களும் இந்த வேலைத் திட்டத்துக்கு ஆதரவளித்தனர். அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன்.

தொங்கு பாலத்தின் கஷ்டமான பயணத்தில் தொடர்ந்து செல்ல வேண்டியுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் திரும்பிவர முடியாது. மீண்டும் வேறு வழியில் திரும்பிச் செல்ல முற்பட்டால், ஓரிரு மாதங்களுக்குள் மீண்டும் வரியுகத்துக்கு செல்ல நேரிடும். மிகப் பெரிய ஆபத்துக்குள் நாடு தள்ளப்படும். 25 - 30 வருடங்களுக்கு மீட்டெடுக்க முடியாத நிலைக்குள் நாடு தள்ளப்படும். நாட்டுக்காகவும் நாட்டின் எதிர்காலத்துக்காகவும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு நான் அவர்களிடம் கோருகிறேன்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அரசியல் அதிகாரத்திற்காகவோ, அரசியல் பிரசித்தத்திற்காகவோ நான் தீர்மானங்களை எடுப்பதில்லை. நாட்டிற்காகவும், இளைஞர்களின் எதிர்காலத்துக்காகவுமே நான் தீர்மானங்களை எடுக்கிறேன். கடந்த இரண்டு வருடங்கள் நான் அரசியல் செய்யவில்லை. அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக தீர்மானங்களை எடுக்கவில்லை.

இந்த பாராளுமன்றத்தில் என்னைப் போன்று நாட்டை நேசிக்கும் பலர் உள்ளனர். தமது தனிப்பட்ட தேவைகளை விடவும், நாட்டின் நலன் குறித்து சிந்திக்கும் பலர் உள்ளனர். அவர்கள் அனைவரிடமும் நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியுடன் இணைந்துகொள்ளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

## ரணில்...

வைக்கப்பட்டது. அவரின் பூதவு டலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், கட்சி உறுப்பினர்கள் என பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.

அவரின் பூதவுடல் இன்று புதன் கிழமை பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. பின்னர் எதிர்வரும் வெள்ளிக்கிழமையிலிருந்து திருகோணமலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு




கொழும்பு, ஜூலை 03

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்படு கிறது.

லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படுகிறது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 3,690 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படவுள்ளது.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 40 ரூபாவினால் குறைக்கப்படுகிறது.

இதன்படி, 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 1,482 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படவுள்ளது அத்துடன் 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு விலை 18 ரூபா குறைக்கப் படுகிறது.

இதற்கமைய, 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 694 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

# ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் திருத்தம்!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 03

ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் திருத்தம் செய்யப் படவுள்ளது.

ஓய்வூதியம் பெறாத தனியார் மற்றும் பகுதி அரச ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக ஊழியர் சேம லாப நிதியம் நிறுவப்பட்டுள்ளது.

இதன்படி ஊழியர் சேமலாப நிதியத்துக்கு உள்வாங் கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களுக்குத் தரமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில் குறித்த சட்டம் திருத்தப் படவுள்ளது.

இதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக, சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்குவ தற்காகத் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார முன் வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது. (அ)

## போதைப்பொருள் கடத்தல்

# இலங்கையர் மூவர் இந்தியாவில் கைது!

சென்னை, ஜூலை 03

40 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான மெத்தம்ஃபெட்டமைன் போதைப்பொருளை இலங் கைக்கு கடத்தவிருந்த 3 இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் மேலும் 6 இந்தியர்கள் கைது செய் யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சென்னைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரி கள் அவர்களை கைது செய்ததன் ஊடாக, மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் குழு ஒன்று பிடிபட்டிருப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

புழல் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் இந்தக் குழுவை வழிநடத்தி வந்தமையும் தெரிய வந்துள்ளது.

அவர்கள் கடந்த ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் கட்டம் கட்டமாகக் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கொழும்பில் இருந்து மாத்தறைக்கு மக்களை அழைத்து சென்ற ரணில்?

கொழும்பு, ஜூலை 03

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை ஆதரித்து கடந்த ஞாயிற் றுக்கிழமை விசேட பிரசாரக் கூட்ட மொன்று மாத்தறையில் நடை பெற்றது. இந்தக் கூட்டத்துக்காக கொழும்பு அடிக்குமாடி குடியிருப் புகளில் உள்ளவர்களை பஸ்களில் அழைத்து சென்றுள்ளனர் என்றும் கொழும்பில் இருந்து மக்களை அழைத்து சென்றே கூட்டம் நடைபெறும் இடத்தை நிரப்பியுள் ளனர் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் ஆளுங் கட்சியின் அமைச்சர்கள், இரா ஜாங்க அமைச்சர், பிரதி அமைச் சர்கள் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

“இக்கூட்டத்தில் நடு கடலில் சூறாவளியில் சிக்கி பழுதடைந்து தத்தளித்துக் கொண்டிருந்த கப் பலை நான்தான் கரைக்கு கொண்டு வந்தேன். ஏனைய அனைத்து மாலு மிகளும் கப்பலில் இருந்து தப்பி சென்றுவிட்டனர். தப்பிச் சென்ற மாலுமிகளிடம் மீண்டும் கப்பலை ஒப்படைக்க போகின்றீர் களா?,” என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கேள்வியெழுப்பியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா பொது ஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திரக் கட்சியின் ஆதர வாளர்கள் கலந்துகொண்டதாக ஆளும் தரப்பு தெரிவித்தி ருந்தது.

ஆனால், இந்தக் கூட்டத்துக்காக கொழும்பு அடிக்குமாடி குடியி ருப்புகளில் உள்ளவர்களை பஸ்க ளில் அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் கொழும்பில் இருந்து மக்களை அழைத்துச் சென்றே கூட்டம் நடைபெறும் இடத்தை நிரப்பியுள்ளனர் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

என்றாலும், ரணில் விக்ரம சிங்கவின் முதல் தேர்தல் கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ள தாகவும் மக்களின் அமோக ஆதரவு அவருக்கு இருப்பதாகவும் ஆளுங் கட்சி விளம்பரப்படுத்தி வருகிறது. (அ)

# பாடசாலை முன் அதிபர், ஆசிரியர் கறுப்புப் பட்டியணிந்து போராட்டம்

கொழும்பு, ஜூலை 03

அரசு, ஜூன் 26 தொடுத்த மிலேச் சத்தனமான தாக்குதலை கண்டித்து நாடு தழுவிய ரீதியில் பாடசாலை முன்பாக அதிபர் ஆசிரியர்கள் கறுப்புப் பட்டிய ணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று பாடசாலை நிறைவடைந்த வேளையில் 2 மணிக்கு பின்னர் இடம் பெற்ற இப்போராட்டம் இலங்கையில் உள்ள சகல பாடசாலைகள் முன்பாகவும் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தை இணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க கூட்ட மைப்பு ஏற்பாடு செய்திருந்தது. (அ)




# தாய் வழங்கிய மதுபானம் உயிரிழந்த 9 வயது சிறுமி

## பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 03

கொழும்பு - பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த ஒன்பது வயது சிறுமியின் மரணம் தொடர் பில் பிரேத பரிசோதனை செய்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கு மாறு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி அதிகளவு மதுபானம் உட்கொண்டதன் கார ணமாக மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்பது வயதும் பத்து மாதங்களு மான / ஹனுக்யா பிரசாந்த், ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு சிகிச்சை பலனின்றி உயிரி ழந்ததாக பொரளை பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

காய்ச்சல் காரணமாக சிறுமியின் தாய், அளவுக்கு அதிகமாக மதுவை குடிக்க வைத்ததால் சிறுமி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாக பொரளை பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறுமியின் தந்தை வெள்ளவத்தை பிரதேசத்தில் பொறியியலாளராக கடமையாற்று வதுடன், குழந்தையும் தாயாரும் மட்டக்களப்பில் வசித்து வந்ததாக பொலிஸார் நீதிமன்றில் சாட்சியங் களை சமர்ப்பித்துள்ளனர்.

இதன்படி, கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக் குச் சென்ற நீதவான், சிறுமியின் மரணம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு பிரேத பரி சோதனைக்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சிறுமியின் சடலத்தை பெற் றோரிடம் ஒப்படைக்குமாறும் நீத வான் உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர், பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் திறப்பு

முல்லைத்தீவு, ஜூலை 03

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் புதிதாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந் நிகழ்வில், வடமாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் திலக் சி.ஏ.தனபால கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பிரிவினை திறந்து வைத்தார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.